

கலைஞர் 100
1924 - 2024

இன்றைய செய்தி நாளைய வரலாறு

# முரசொலி

Murasoli

நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி

www.murasoli.in

murasolidaily@gmail.com

தொடக்கம்: 10.8.1942 – முரசு: 83 – ஒலி: 110 – திருவள்ளுவர் ஆண்டு 2055 – கார்த்திகை 14 – வெள்ளிக்கிழமை 29 நவம்பர் 2024 – வெளியூர் 16 பக்கங்கள் **Established : 10.8.1942 - Volume : 83 - Issue 110 : Thiruvalluvar Year - 2055 - Karthigai 14 - Friday 29 November 2024 - Dak 16 Pages ₹ 5.00**


### பிரதமரின் ‘விஸ்வகர்மா’ திட்டத்தை தமிழ்நாடு அரசு செயல்படுத்தாது!

## சமூகநீதி அடிப்படையில் அதிகாரம் அளிக்கும் வகையில் விரிவான திட்டத்தை தமிழ்நாடு அரசு உருவாக்கும்!

### முதல்வர் மு.க.ஸ்டாலின் ஒன்றிய அமைச்சருக்குக் கடிதம்!

சென்னை, நவ.29-

**“பிரதமரின் விஸ்வகர்மா திட்டத்தை தமிழ்நாடு அரசு செயல்படுத்தாது; சமூக நீதி அடிப்படையில், தமிழ்நாட்டிலுள்ள கைவினைஞர்களுக்கு அதிகாரம் அளிக்கும் வகையில் தமிழ்நாட்டிற்கு என விரிவான திட்டம் ஒன்றினை உருவாக்கிட தமிழ்நாடு அரசு முடிவு செய்துள்ளது” முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள், ஒன்றிய குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் ஜிதன் ராம் மஞ்சி அவர்களுக்குக் கடிதம் எழுதியுள்ளார்.**



ஒன்றிய அரசின் குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில்கள் அமைச்சகத்தால் செயல்படுத்தப்படும், பிரதமரின் விஸ்வகர்மா திட்டம், சாதி அடிப்படையிலான தொழில் முறையை வலுப்படுத்தும் என்பதால், தற்போதைய வடிவில் அதனை செயல்படுத்திட இயலாது என்றும், சமூக நீதி அடிப்படையில், தமிழ்நாட்டிலுள்ள கைவினைஞர்களுக்கு அதிகாரம் அளிக்கும் வகையில் விரிவான திட்டம் ஒன்றினை உருவாக்கிட தமிழ்நாடு அரசு முடிவு செய்திருப்பதாகவும் தெரிவித்து, முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள், ஒன்றிய குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் ஜிதன் ராம் மஞ்சி அவர்களுக்கு நேற்று முன்தினம் (27.11.2024) கடிதம் எழுதியுள்ளார்.

அக்கடிதத்தில், இந்திய அரசின் குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில்கள் அமைச்சகத்தால் செயல்படுத்தப்படும் பிரதம மந்திரி விஸ்வகர்மா யோஜனா திட்டத்தில் உரிய திருத்தங்களை மேற்கொள்ளுமாறு தமிழ்நாடு அரசின் சார்பில் 4.1.2024 நாளன்று இந்தியப் பிரதமர் அவர்களுக்கு தான் எழுதியிருந்த கடிதத்தினை முதலமைச்சர் அவர்கள் நினைவு கூர்ந்துள்ளார்.

ஒன்றிய அரசின் விஸ்வகர்மா திட்டம், சாதி அடிப்படையிலான தொழில் முறையை வலுப்படுத்தும் என்பதைக் கருத்தில் கொண்டு, இந்தத் திட்டத்தை ஆய்வு செய்திட தமிழ்நாடு அரசின் சார்பில் ஒரு குழு அமைக்கப்பட்டதாகவும், இக்குழு விரிவான ஆய்வினை மேற்கொண்டு, இத்திட்டத்தில் கீழ்க்காணும் மாற்றங்களைச் செய்திடப் பரிந்துரைத்துள்ளதாகவும், அவற்றை இந்தியப் பிரதமர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வந்ததாகவும் தெரிவித்துள்ளார்.

**தமிழ்நாடு அரசின் சார்பில் அமைக்கப்பட்ட குழுவின் பரிந்துரைகள்**

விண்ணப்பதாரரின் குடும்பம், பாரம்பரியமாக குடும்ப அடிப்படையிலான வர்த்தகத்தில் ஈடுபட வேண்டிய கட்டாயத் தேவை நீக்கப்பட வேண்டும். அதற்கு பதிலாக, வழி காட்டுதல்களில் பட்டியலிடப்பட்டுள்ள எந்தவொரு தொழிலையும் மேற்கொள்ள விரும்பும் எந்தவொரு நபரும் இந்தத் திட்டத்தின்கீழ் உதவி பெற தகுதியுடையவராக இருக்க வேண்டும்.

இத்திட்டத்தில் பயன்பெறுவோரின் குறைந்தபட்ச வயது வரம்பினை 35ஆக உயர்த்தலாம். இதனால் தங்கள் குடும்ப வர்த்தகத்தைத் தொடர, அதனை நன்கறிந்தவர்கள் மட்டுமே இந்தத் திட்டத்தின்கீழ் பலன்களைப் பெற முடியும்.

கிராமப்புறங்களில் பயனாளிகளை சரிபார்க்கும் பொறுப்பு கிராம பஞ்சாயத்து தலைவருக்கு பதிலாக, வருவாய்த் துறையைச் சேர்ந்த கிராம நிர்வாக அலுவலரிடம் ஒப்படைக்கப்பட வேண்டும்.

இந்நிலையில், ஒன்றிய அரசின் குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில்கள் அமைச்சகத்திலிருந்து 15.3.2024 அன்று வரப்பெற்ற பதிலில், மேற்படி பரிந்துரைக்கப்பட்ட திருத்தங்கள் தொடர்பாக எதுவும் குறிப்பிடப்பட வில்லை என முதலமைச்சர் அவர்கள் தனது கடிதத்தில் தெரிவித்துள்ளார்.

எனவே, பிரதமரின் விஸ்வகர்மா திட்டத்தை தற்போதைய வடிவில் செயல்படுத்துவதை தமிழ்நாடு அரசு முன்னெடுத்துச் செல்லாது என்றும், இருப்பினும், சமூக நீதி என்ற ஒட்டுமொத்த கொள்கையின்கீழ் தமிழ்நாட்டில் உள்ள கைவினைஞர்களுக்கு அதிகாரம் அளிக்கும் வகையில், சாதி அடிப்படையில் பாகுபாடு காட்டாத கைவினைஞர்களை உள்ளடக்கி, விரிவான திட்டம் ஒன்றினை உருவாக்கிட தமிழ்நாடு அரசு முடிவு செய்துள்ளதாகவும் முதலமைச்சர் அவர்கள் தனது கடிதத்தில் குறிப்பிட்டுள்ளார்.

தமிழ்நாடு அரசு செயல்படுத்தவிருக்கும் இந்தத் திட்டம், சாதி மற்றும் குடும்பத் தொழில் வேறுபாடின்றி, மாநிலத்தில் உள்ள அனைத்து கைவினைஞர்களுக்கும் முழுமையான ஆதரவை அளிக்கும் என்றும், இத்தகைய திட்டம் அவர்களுக்கு நிதி உதவி, பயிற்சி மற்றும் அவர்களின் வளர்ச்சிக்குத் தேவையான அனைத்தையும் விரிவாக உள்ளடக்கியதாக இருக்கும் என்றும் பெருமைபடத் தெரிவித்துள்ளார்.

## ஃபெங்கல் புயல் வலுவிழந்தது !

### நாளை மாமல்லபுரம் – காரைக்காலிடையே கரையை கடக்கும்! வானிலை ஆய்வு மையம் அறிவிப்பு!

சென்னை, நவ.29-

தென்மேற்கு வங்கக் கடலில் நிலவும் ஆழ்ந்த காற்றழுத்த தாழ்வு மண்டலம் தொடர்ந்து நகராமல் ஒரே இடத்தில் மையம் கொண்டுள்ளது. இதனால் புயலாக வலுப்பெறுவதில் தாமதம் ஏற்பட்டுள்ளது.

தென்மேற்கு வங்கக் கடலில் நிலை கொண்டுள்ள ஆழ்ந்த காற்றழுத்த தாழ்வு மண்டலம் மிகவும் மெதுவாக நகர்ந்து வந்தது. நேற்று அதிகாலை 2 கிலோ மீட்டர் வேகத்தில் நகர்ந்து வந்த ஆழ்ந்த காற்றழுத்த தாழ்வு மண்டலம் தற்போது நகராமல் ஒரே இடத்தில் மையம் கொண்டிருந்தது. இதனால் ஆழ்ந்த காற்றழுத்த தாழ்வு மண்டலம் புயலாக மாறுவதில் தாமதம் ஏற்பட்டு வருகிறது.

ஆழ்ந்த காற்றழுத்த தாழ்வு மண்டலம், இலங்கை திரிகோணமலைக்கு கிழக்கு வடகிழக்கே 110 கிலோ மீட்டர் தொலைவிலும், தமிழ்நாட்டின் நாகப்பட்டினத்திற்கு தென்கிழக்கு திசையில் 310 கிலோமீட்டர் தொலைவிலும், புதுவைக்கு தென்கிழக்கு 410 கிலோமீட்டர் தொலைவிலும், சென்னைக்கு தெற்கு தென்கிழக்கு 480 கிலோமீட்டர் தொலைவிலும் மையம் கொண்டுள்ளதாக வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது. ஆழ்ந்த காற்றழுத்த தாழ்வு மண்டலம் இலங்கைக் கரையோரப் பகுதியில் வடக்குவடமேற்கு திசையில் நகர்ந்து புயலாக வலுப்பெறும் என்றும் வானிலை ஆய்வு மையம் கூறியுள்ளது. ஃபெங்கல் எனப் பெயரிடப்பட உள்ள இந்த புயல் தொடர்ந்து வடக்கு வட மேற்கு திசையில் நகர்ந்து வலுவிழந்து வட தமிழ்நாடு புதுவை கடற்கரை இடையே காரைக்கால் மற்றும் மாமல்லபுரம் இடையே ஆழ்ந்த காற்றழுத்த தாழ்வு மண்டலமாக 30ஆம் தேதி கரையை கடக்கும் என்று வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

ஆழ்ந்த காற்றழுத்த தாழ்வுப்பகுதி காரணமாக தென்மேற்கு வங்க கடலில் இன்று காலை வரை 65 முதல் 75 கிலோ மீட்டர் வேகத்தில் காற்று வீசும் என்று வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

### அரசியல் சாசன புத்தகத்தை கையில் ஏந்தி

## வயநாடு எம்.பி.யாக பிரியங்கா காந்தி பதவியேற்பு!

### அனைத்துக் கட்சி எம்.பி.க்கள் வாழ்த்து!

புதுடெல்லி, நவ.29-

மக்களவை வயநாடு எம்.பி.யாக பதவியேற்றுக் கொண்டார் பிரியங்கா காந்தி.



பிரியங்கா காந்திக்கு அனைத்துக்கட்சி எம்.பிக்கள் வாழ்த்துத் தெரிவித்தனர்.

வயநாடு மக்களவைத் தொகுதி இடைத்தேர்தலில் வெற்றி பெற்ற பிரியங்கா காந்தி நாடாளுமன்ற உறுப்பினராக பதவியேற்றார்.

வயநாடு தொகுதியில் அண்மையில் நடைபெற்ற இடைத்தேர்தலில் போட்டியிட்ட காங்கிரஸ் பொதுச்செயலாளர் பிரியங்கா காந்தி 4 லட்சத்து 10 ஆயிரத்துக்கும் அதிகமான வாக்குகள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றார். பிரியங்கா காந்தியை நூற்றுக்கணக்கான காங்கிரஸ் தொண்டர்கள் மேளதாளத்துடன் நாடாளுமன்றத்திற்கு வழி அனுப்பி வைத்தனர். கேரளாவின் பாரம்பரிய புடவை அணிந்து நாடாளுமன்றம் சென்ற பிரியங்கா காந்தியை, காங்கிரஸ் எம்.பிக்கள் வரவேற்றனர்.

அப்போது, தனது கைப்பேசி மூலம் பிரியங்கா காந்தியை, ராகுல்காந்தி புகைப்படம் எடுத்து மகிழ்ச்சியை வெளிப்படுத்தினார்.

இதையடுத்து, வயநாடு தொகுதி நாடாளுமன்ற உறுப்பினராக பிரியங்கா காந்தி பதவியேற்றார். அரசியல் சாசன புத்தகத்தை கையில் ஏந்தியவாறு அவர் பதவியேற்றுக் கொண்டார்.

நாடாளுமன்ற உறுப்பினராக பதவியேற்ற பிரியங்கா காந்திக்கு அனைத்துக் கட்சி எம்.பிக்களும் வாழ்த்துத் தெரிவித்தனர்.

### அதானி முறைகேடு, மணிப்பூர் வன்முறை குறித்து விவாதிக்க

## காங்கிரஸ், தி.மு.க. உள்ளிட்ட எதிர்க்கட்சிகள் 3வது நாளாக வலியுறுத்தல்!

### விவாதம் நடத்த மக்களவை சபாநாயகர் அனுமதி மறுப்பு - முடங்கியது நாடாளுமன்றம்!

புதுடெல்லி, நவ.29-

அதானி ஊழல் விவகாரம் தொடர்பாக விவாதம் நடத்த அனுமதி மறுக்கப்பட்டதை கண்டித்து எதிர்க்கட்சி எம்.பிக்கள் முழக்கம் எழுப்பியதையடுத்து நாடாளுமன்றத்தின் இரு அவைகளும் தொடர்ந்து மூன்றாவது நாளாக முடங்கியது.

நாடாளுமன்ற குளிர்கால கூட்டத்தொடர் கடந்த 26ஆம் தேதி தொடங்கியது. அதானி குழும முறைகேடு, மணிப்பூர் விவகாரம், சம்பல் துப்பாக்கிச்சூடு சம்பவம் குறித்து விவாதம் நடத்தக்கோரி காங்கிரஸ், தி.மு.க. உள்ளிட்ட இந்தியா கூட்டணி எம்.பி.க்கள் வலியுறுத்தி வருகின்றனர்.

மணிப்பூர் வன்முறை தொடர்பாக விவாதம் நடத்தக்கோரி தி.மு.க. சார்பில் மக்களவை செயலாளரிடம் நேற்றும் நோட்டீஸ் வழங்கப்பட்டது. அதன்படி, மூன்றாவது நாளான நேற்று காலை 11 மணிக்கு மக்களவை கூடியதும், அதானி முறைகேடு உள்ளிட்ட விவகாரங்கள் குறித்து விவாதம் நடத்தக்கோரி, காங்கிரஸ், தி.மு.க. உள்ளிட்ட எதிர்க்கட்சிகள் அவையின் மைய பகுதிக்குச் சென்று முழக்கமிட்டனர். இதனால் மக்களவை பகல் 12 மணி வரை ஒத்திவைக்கப்பட்டது. பின்னர் அவை மீண்டும் கூடியதும் அதானி முறைகேடு குறித்து விவாதிக்க வலியுறுத்தி முழக்கமிட்டதால் அவை நாள் முழுவதும் ஒத்திவைக்கப்பட்டது.

இதேபோன்று, மாநிலங்களவையிலும் அதானி முறைகேடு, மணிப்பூர் விவகாரம் எதிரொலித்தது. இந்த பிரச்சினை தொடர்பாக விவாதம் நடத்த வேண்டும் என்று காங்கிரஸ், தி.மு.க. உள்ளிட்ட எதிர்க்கட்சி எம்.பிக்கள் முழக்கங்களை எழுப்பினர். ஆனால் எதிர்க்கட்சிகளின் கோரிக்கைகளை ஏற்க மாநிலங்களவை தலைவர் அனுமதி மறுத்தார். இதையடுத்து, மாநிலங்களவை முதலில் 12 மணிவரை ஒத்திவைக்கப்பட்டு, பின்னர் நாள் முழுவதும் ஒத்திவைக்கப்பட்டது.

இதனிடையே, காங்கிரஸ், தி.மு.க. திரிணாமுல் காங்கிரஸ் உள்ளிட்ட எதிர்க்கட்சிகளின் கடும் எதிர்ப்பைத் தொடர்ந்து வக்ஃப் வாரிய நாடாளுமன்ற கூட்டுக்குழுவின் காலம் அடுத்த ஆண்டு பட்ஜெட் கூட்டத்தொடரின் கடைசி நாள் வரை நீட்டிக்கப்பட்டது. இதற்கான தீர்மானம் நாடாளுமன்றத்தில் நேற்று நிறைவேற்றப்பட்டது. இதனால் அடுத்த நாடாளுமன்ற கூட்டத்தொடர் வரை வக்ஃப் வாரிய திருத்த மசோதா தாக்கல் செய்யப்படாது என்பது குறிப்பிடத்தக்கது.

## மகாராஷ்டிராவில் முதலமைச்சரைத் தேர்ந்தெடுப்பதில் இழுபறி நீடிப்பு!

### தேவேந்திர பட்னாவிசை முதலமைச்சராக பா.ஜ.க.வில் கடும் எதிர்ப்பு!

மும்பை, நவ.29-

மகாராஷ்டிராவில் தேவேந்திர பட்னாவிசை முதலமைச்சராக பா.ஜ.க.வில் கடும் எதிர்ப்பு எழுந்துள்ளது. மராத்தா பிரிவைச் சேர்ந்தவரை முதலமைச்சராக்க வேண்டும் என, பா.ஜ.க. எம்.எல்.ஏக்கள் போர்க்கொடி உயர்த்தியுள்ளதால் மகாராஷ்டிரா அரசியலில் பரபரப்பு எழுந்துள்ளது.

மகாராஷ்டிரா சட்டமன்ற தேர்தலில் பா.ஜ.க. கூட்டணி 230 இடங்களில் வெற்றி பெற்றது. இதையடுத்து, தற்போதைய துணை முதலமைச்சர் ஆன தேவேந்திர பட்னாவிசை முதலமைச்சராக்க வேண்டும் என்று பா.ஜ.க. தீவிரம் காட்டி வருகிறது. ஆனால் ஏக்நாத் ஷிண்டே தலைமையில் தேர்தலை சந்தித்து மிகப்பெரும் வெற்றி பெற்றுள்ளதால் மீண்டும் அவரையே முதலமைச்சர் ஆக்க வேண்டும் என்று சிவசேனா வலியுறுத்தி வருகிறது. முதலமைச்சர் பதவியை பீகார் மாடல் அடிப்படையில் மீண்டும் தங்களுக்கு தர வலியுறுத்தி ஏக்நாத் ஷிண்டே நெருக்கடி கொடுத்து வருகிறார். பீகாரில் பா.ஜ.க. எம்.எல்.ஏ.க்கள் எண்ணிக்கையைப் பார்க்காமல், ஐக்கிய ஜனதா தளத் தலைவர் நிதிஷ்குமாரை முதலமைச்சராக்கியது போன்று, மகாராஷ்ரா விலும் ஏக்நாத் ஷிண்டே முதல்வராக நீடிக்க வேண்டும் என சிவசேனா வலியுறுத்தி வருகிறது. இந்நிலையில், தேவேந்திர பட்னா விசை முதலமைச்சராக பா.ஜ.கவில் கடும் எதிர்ப்பு எழுந்துள்ளது. மராத்தா பிரிவைச் சேர்ந்தவரை முதலமைச்சராக்க வேண்டும் என, பா.ஜ.க. எம்.எல்.ஏக்கள் போர்க்கொடி உயர்த்தியுள்ளதால், மகாராஷ்டிரா அரசியலில் பரபரப்பு ஏற்பட்டுள்ளது.

### கச்சா எண்ணெய் விலை குறைந்தும்

## பெட்ரோல் விலையை ஏன் குறைக்கவில்லை ?

### ஒன்றிய பா.ஜ.க. அரசுக்கு காங்கிரஸ் கேள்வி!

புதுடெல்லி, நவ.29-

5 ஆண்டுகளில் பெட்ரோல், டீசல் விற்பனை மூலம் ஒன்றிய அரசு ரூ.36 லட்சம் கோடி வசூல் செய்தும் விலை குறைக்கப்படவில்லை என காங்கிரஸ் குற்றம் சாட்டியுள்ளது.

கடந்த 5 ஆண்டுகளாக பெட்ரோல் மற்றும் டீசலை அதிக விலைக்கு விற்றதன் மூலம் ஒன்றிய அரசு 36 லட்சம் கோடி ரூபாய் வசூல் செய்துள்ளதாக, காங்கிரஸ் கட்சி குற்றம்சாட்டியுள்ளது.

காங்கிரஸ் மாநிலங்களவை உறுப்பினர் ரன்தீப் சிங் சுர்ஜவாலா வெளியிட்டுள்ள சமூக வலைதளப்பதிவில், ஒன்றிய அரசு கடந்த 5 ஆண்டுகளில் பெட்ரோல் டீசல் விற்பனை மூலம் 36 லட்சம் கோடி ரூபாய் வசூலித்துள்ளதாகவும், ஆனால் கடந்த 2014 ஆம் ஆண்டு மே முதல் தற்போது வரை கச்சா எண்ணெய் விலை 32 சதவீதம் குறைந்துள்ளதாக கூறியுள்ளார். தற்போது கச்சா எண்ணெய் விலை 73 அமெரிக்க டாலருக்கு விற்பனை செய்யப்படுவதாகவும், அதன்படி பார்த்தால் டெல்லியில் ஒரு லிட்டர் பெட்ரோல் 59 ரூபாய் 61 காசுகளுக்கு விற்கப்படவேண்டும் ஆனால், ஒரு லிட்டர் பெட்ரோல் 94 ரூபாய் 77 காசுகளுக்கு விற்கப்படுவதாக குறிப்பிட்டுள்ளார்.

### மெரினா முதல் பட்டினப்பாக்கம் வரை

## கடலில் இறங்க பொதுமக்களுக்கு தடை!

### போலீசார் தீவிர ரோந்து பணி!

சென்னை, நவ.29-

பெங்கல் புயல் காரணமாக கடல் 8 முதல் 12 அடி உயரத்திற்கு அலைகள் எழும்புவதால் மெரினா முதல் பட்டினப்பாக்கம் வரையிலான கடலில் பொதுமக்கள் இறங்கவும், குளிக்கவும் போலீசார் தடை விதித்துள்ளனர். வங்கக்கடலில் உருவாகி உள்ள காற்றழுத்த தாழ்வு நிலை மண்டலமாக மாறி தற்போது புயலாக உருவெடுத்துள்ளது. இந்த புயலுக்கு பெங்கல் என்று பெயரிடப்பட்டுள்ளது. இதனால் மெரினா கடற்கரை வழக்கத்தை விட அலைகள் மிகவும் ஆக்ரோஷத்துடன் காணப்படுகிறது. எனவே அலையானது 8 அடி முதல் 12 அடி உயரத்திற்கு எழும்புகிறது.

மெரினா கடற்கரை சுற்றுலா தலம் என்பதால் எப்போதும் பொதுமக்கள் கடல் அழகை ரசிக்க வந்து செல்வது வழக்கம். ஆனால் தற்போது பெங்கல் புழல் காரணமாக காற்றின் வேகமும் அதிகமாக இருப்பதால் மெரினா முதல் பட்டினப்பாக்கம் சீனிவாசபுரம் வரை மணலுடன் சூறைக் காற்று வீசுகிறது. எனவே பொதுமக்களின் பாதுகாப்பு கருதி போலீஸ் கமிஷனர் அருண் உத்தரவுப்படி மெரினா கடற்கரைக்கு வரும் பொதுமக்கள் கடலில் இறங்கவோ, குளிக்கவோ தடை விதிக்கப்பட்டுள்ளது. இந்த தடை உத்தரவால் அண்ணாசதுக்கம், மெரினா மற்றும் பட்டினப்பாக்கம் போலீசார் தனித் தனி குழுக்களாக பிரிந்து மெரினா முதல் பட்டினப்பாக்கம் கடற்கரை வரை ரோந்து வாகனம் மூலம் பாதுகாப்பு பணி மேற்கொண்டு வருகின்றனர்.

இந்த பணியில் 3 காவல் நிலையத்தில் இருந்து தலா 15 போலீசார் ஈடுபட்டுள்ளனர். இதுதவிர மெரினா கடற்கரை உயிர் காக்கும் குழுவினர் மற்றும் குதிரைப்படையினரும் பணியில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர். பொதுமக்கள் கடற்கரைக்கு வந்தாலும், கடல் அருகே யாரும் செல்ல வேண்டாம் என்று ஒலி பெருக்கி மூலம் போலீசார் எச்சரிக்கை விடுத்த வண்ணம் உள்ளனர். மேலும், கடல் அலையின் அருகே நின்று பொதுமக்கள் செல்பி எடுக்கவும் போலீசார் தடைவித்துள்ளனர்.